கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்,
வடக்கு மாகாணசபை,
2020.07.01

சுற்றுநிருபம் - 02/2020

சகல கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள்/ செயலாளர்களுக்கும்,

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு துணைவிதிக்கமைய குழு அமைத்தலும், பதவிதாங்குநர் தெரிவும்

கூட்டுறவுச் சங்கங்களில் அவற்றின் தொழிற்பாட்டின் தன்மைக்கேற்ப சங்கத்தின் அலுவல்களை நிருவகிப்பதற்கு ஒரு குழு இருக்கும். இந்த குழுவின் அமைப்பு தொடர்பில் துணைவிதியில் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது தாங்கள் அறிந்த விடயமாகும் . ஆரம்ப கூட்டுறவுச்சங்கங்களாயின் 18வயதுக்கும் 35 வயதுக்குமிடைப்பட்ட ஆகக் குறைந்தது இருவரையாவது உள்ளடக்கிய குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டிருக்கும். இரண்டாம்படி கூட்டுறவுச் சங்கங்களில் குழுவுக்கு தெரிவு செய்யப்படும் உறுப்பினர்கள் தொடர்பில் துணைவிதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டதற்கமைய பொதுச்சபையில் இருந்து சனநாயக ரீதியில் தெரிவு செய்யப்படுவார்கள். சில வகைக் கூட்டுறவுச் சங்கங்களின் துணைவிதிகளில் பொதுச்சபையிலிருந்தே பதவிதாங்குநர் தெரிவு செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கூட்டுறவுச்சட்ட ஏற்பாடுகளுக்கமைய ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்களில் 18 வயதுக்கும் 35 வயதுக்குமிடைப்பட்ட ஆகக்குறைந்தது இரு உறுப்பினர்களையாவது உள்ளடக்கி குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுவது அவசியமாகும். இவ் வயதுக்கிடைப்பட்டோரை உள்ளடக்கக்கூடியதாக பொதுச்சபைப் பிரதிநிதிகள் தெரிவு இடம்பெறுவதை உறுதிப்படுத்தல் வேண்டும்.

துணைவிதிகளில் மேற்படி சனநாயக ரீதியான தெரிவுகளுடன் நியமன உறுப்பினர்கள் பற்றிய விசேட ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இவ் விசேட ஏற்பாடுகளின் கீழ், மாவட்ட அரசாங்க அதிபரால் பெயர் குறித்து விதப்புரை செய்யப்பட்டதன் பேரில் பதிவாளரால்/ஆணையாளரினால், உதவி பதிவாளரால்/உதவி ஆணையாளரால் நியமிக்கப்படுபவர், அல்லது ஆணையாளரின் தற்துணிவில் நியமிக்கப்படுபவர், மற்றும் துறைசார் அரச திணைக்களங்களிலிருந்து சிபாரிசு செய்யப்பட்டு அல்லது தொழிற்படும் இடப்பரப்பில் கடமையாற்றும் துறைசார் உத்தியோகத்தர்களிலிருந்து பதிவாளரால் நியமிக்கப்படுபவர் என்றவாறு அமைந்தாற்போல் துணைவிதிகள் அமைந்துள்ளன. இது கூட்டுறவுச் சங்கங்களின் நோக்கங்கள் சரியாக அடையப்பட வேண்டும் என்ற அங்கத்தவர் சார்பு ஏற்பாடாகவே அமைந்திருக்கும்.

பொதுச்சபையிலிருந்து குழுவின் பதவி தாங்குநர்கள் தெரிவை ஏற்பாடாக கொண்ட சங்கங்கள் குழு உறுப்பினர்களை மட்டும் தெரிவு செய்த பின் பதவி தாங்குநர் தெரிவை இன்னொரு குறிப்பிட்ட நேரத்தில் அல்லது இன்னொரு தினத்தில் மேற்கொள்வதற்கான ஏற்பாட்டைக் கொண்டதாக துணைவிதி திருத்தத்தை மேற்கொள்வது பொருத்தமானதாக அமையும் . துணைவிதியில் இயக்குனர்சபை / நெறியாளர் குழு, பணிப்பாளர் சபை/ நிர்வாக சபை எனக் குறிப்பிடப்படுவோர் சனநாய ரீதியில் தெரிவு செய்யப்படுவோரையும் மற்றும் துணைவிதி விசேட ஏற்பாடுகளுக்கமைய நியமிக்கப்படுவோரையும் உள்ளடக்கியவர்களே எனக்கருதப்படும். துணைவிதிக்கமைய குழு உறுப்பினர்களுக்கான பொறுப்பு, கடமை, அதிகாரம் குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் அனைவருக்குமுண்டு. ஆகவே பெயர் குறித்து நியமனம் செய்யப்படும் உறுப்பினர்களையும் உள்ளடக்கியே பதவி தாங்குநர் தெரிவு இடம்பெற வேண்டும்.

சில கூட்டுறவு சங்கங்களில் நியமன உறுப்பினர்களை நியமிக்க வேண்டியிருப்பினும் சனநாயக ரீதியில் தெரிவு செய்யப்படும் குழு உறுப்பினர்களை மட்டும் கொண்டு புதிய பதவிதாங்குநர் தெரிவு இடம்பெறுவதாக எனக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. இது ஏற்புடையதல்ல. மாறாக, துணைவிதியில் குழுவுக்கான நியமன உறுப்பினர் ஏற்பாட்டைக் கொண்டுள்ள சங்கங்கள் இவ்விடயத்தை கவனத்திற் கொண்டு குறித்த துணைவிதி ஏற்பாடுகளின்படி குழுவினை அமைத்த பின்னர் புதிய பதவிதாங்குநர் தெரிவை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு - "குழு" என்பது பதிவுசெய்யப்பட்ட சங்கமொன்றினது அலுவல்களின் முகாமை பொறுப்பிக்கப்பட்டுள்ள அதன் ஆளுநர் குழுவெனப் பொருள்படுவதுடன் பதிவுசெய்யப்பட்ட சங்கமொன்றின் பணிப்பாளர் சபையையும் பிரிவு 60 அ என்பதன் (2) ஆம் உட்பிரிவின் கீழ்ப் பதிவாளரினால் நியமிக்கப்பட்ட ஆட்களையும் உள்ளடக்கும்.

பொ.வாகீசன்,
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்,
கூட்டுறவு சங்கங்களின் பதிவாளரும்,
வடக்கு மாகாண சபை.

**பொ.வாகீசன்**
**கூட்டுறவு அபிவிருத்தி** ஆணையாளரும்
**கூட்டுறவுச் சங்கங்களின்** பதிவாளரும்
வடக்கு மாகாண சபை

பிரதி — கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
-யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் முல்லைத்தீவு.